மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் சாணக்கியம் பொருந்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதனைத் தமிழில் மொழிபெயர்க்க அரசாங்கம் முன்வருமா? அரசாங்கம் இதைத் தமிழில் மொழி பெயர்க்க போவதாகத் பத்திரிகையில் ஒரு குறிப்பு வந்தது. அவ்வாறு தமிழில் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய அவ்வளவு பெரிய அவசியம் இன்றைக்குத் தமிழகத்திலே இல்லை என்று கருதுகிறேன். அப்படித் தேவை என்றால்—கௌடில்யரையும் மிஞ்சுகின்ற அரசியல்வாதிகள் தமிழகத்தில் இருக்கிறார்கள் ; ஆகவே, தமிழிலேயே நூல் எழுதப்படலாம்.

Posts of Engineers in Madras Corporation.

*290 : *Q.*—THIRU R.E. CHANDRAN JAYAPAL : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has not given effect to G.O. Ms. No. 294, Public Works Department, dated 22nd February 1977 redesignating the posts of Supervisors as Junior Engineers, Junior Engineers as Assistant Engineers, Assistant Engineers as Assistant Executive Engineers and Executive Engineers as Assistant Divisional Engineers: and

(*b*) if so, the reasons for the delay?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம். மாநகராட்சி அரசாணையை இதுவரையில் செயல் படுத்தவில்லை.

(ஆ) சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் பொறியியல் பணியாளர்கள் தொடர்பாக பொதுப்பணித் துறையின் 22-2-77 ஆம் நாளிட்ட 294 ஆம் எண் அரசணையைச் செயல் படுத்துவது குறித்து சென்னை மாநகராட்சி ஆணையாளர் சில விளக்கங்களைக் கேட்டார். அவை அரசின் ஆய்விலுள்ளன. ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போன்று மாநகராட்சியிலே சுகாதாரத் துறையிலே இருக்கின்ற தலைமை அதிகாரிகள் இன்னும் பதவி உயர்வு பெறுமல் இருக்கிறார்கள், இன்னும் 6 மாத காலத்தில் அவர்கள் ஓய்வு

1978 பிப்ரவரி 27

பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. முறையாக தலைமைப் பொறியாளர்களை, சீனியர் அதிகாரிகளை சீனியாரிட்டி அடிப்படையிலே முன்பெல்லாம் பதவி உயர்த்தி வந்தார்கள் ஆனால் மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு இந்த முறையைக் கையாளாமல் இருக்கிறார்கள் இப்போது அந்த முறையைக் கொண்டு சுகாதாரத் துறையிலே உள்ள அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது பொறியியல் பணியாளர்களைப்பற்றிய கேள்வி. சுகாதாரத் துறை பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விளக்கம அளிக்கலாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பொறியாளர்கள் சம்பந்தமாக விரைவில் அறிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். விரைவில் என்றால் சில நேரங்களில் ஒரு ஆண்டுக் காலம் கூட தாழ்த்தப்பட்டுவிடுகிறது. ஆகவே விரைவில் என்றால் எவ்வளவு விரைவில் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விரைவில் என்பதற்கு முழுமையான பொருள் எதுவோ அதைத்தான் குறிப்பிடுகிறேன்.

நேத்தாஜி சுபாஷ்சந்திரபோஸ் சாலை.

291 வினா—திரு து. புருஷோத்தமன் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையை அகலப்படுத்தி, கடைகளை ஒழுங்காக அமைக்கச் செய்யும் திட்டம் ஏதேனும் மாநகராட்சியினால் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம். அரசினால் இத் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி 30-8-1977-ல் வழங்கப்பட்டது.

திரு. து. புருஷோத்தமன் : நடைபாதையிலே கடைகள் வைத்திருப்பதால் ஜனநெருக்கம் ஏற்பட்டு தொல்லை ஏற்படுகின்ற காரணத்தாலே அந்தக் கடைகளை எல்லாம் ஒழுங்குபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவைகளை ஒழுங்கு படுத்துவதற்கு ஆலோசனைகளைச் சொல்ல குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அது மாநகராட்சியின் தனி அதிகாரி, ஆணையர் மற்றும் சில அதிகாரிகளைக் கொண்டதாக இருக்கிறது. அவர்கள் ஒழுங்குபடுத்துவதுபற்றிய அறிக்கையை அரசுக்கு வழங்குவார்கள்.

திரு. மு. அரங்கநாதன் : இது போன்ற கடைகளைக் கட்டுகின்ற பிரச்னை, பிராட்வே பஸ் ஸ்டாண்டிற்குள்ளே கடைகள் கட்டப்பட்டால் அது போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும், சுகாதாரத்துக்கு கேடாகவும் இருக்கும் என்பதால் கடைகள் உள்ளே